


நல்லவே எண்ணல் வேண்டும்..,

எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் “தேமதுரத் தமிழோசை உலகமெலாம்” DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 119 | 24.10.2025 | FRIDAY | IPPASI : 7 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 119 | 24.10.2025 | வெள்ளிக்கிழமை | ஐப்பசி : 7 | விலை : ரூ.5/– |

**3** புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பு: தமிழகத்தில் அக்.28 வரை மழை தொடரும்

**4** வெற்றியைக் கணக்கிட்டு அதிமுக கூட்டணியில் சேர சம்மதம்! 30 தொகுதிகள் கேட்கும் அன்புமணி

**2** பூண்டி ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு விநாடிக்கு 4,500 கன அடியாக அதிகரிப்பு

# ஆவின் பால் விநியோக வாகன டெண்டர் விண்ணப்பத்தில் விதிமீறினால் நடவடிக்கை: ஐகோர்ட்டில் அரசு உறுதி

சென்னை: அக்.24-

ஆவின் பால் பாக்கெட் விநியோகத்துக்கு பிரத்யேக வாகனங்களுக்கான டெண்டரில், நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத வாகனங்களின் விண்ணபபங்கள் நிராகரிக்கப்படும் என தமிழக அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் உறுதி தெரிவித்துள்ளது.

சென்னை அம்பத்தூர், மாதவரம் மற்றும் சோளிங்கநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள பால் பண்ணைகளில் இருந்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கு ஆவின் பால் பாக்கெட் விநியோகம் செய்வதற்காக 143 பிரத்யேக வாகனங்களுக்கு ஆவின் நிறுவனம் டெண்டர் கோரியிருந்தது.




டெண்டரில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றாத, தகுதியற்ற வாகனங்களையும் டெண்டரில் பங்கேற்க அனுமதித்துள்ளதாகவும், டெண்டரில் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும் கூறி, திருவள்ளூர் மாவட்ட சரக்கு போக்குவரத்து சேவை கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் தலைவர் ஞானசேகரன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி லட்சுமி நாராயணன் முன் விசாரணைக்கு வந்த போது, டெண்டர் இறுதி செய்வதற்கு முன்பே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வாகனங்களை முறையாக ஆய்வு செய்து சரி பார்த்து, டெண்டர் விதிகளை பூர்த்தி செய்யாத வாகனங்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் உறுதி தெரிவித்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, அரசு தலைமை வழக்கறிஞரின் உத்தரவாதத்தை பின்பற்றி டெண்டர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆவின் நிறுவனத்துக்கு உத்தரவிட்டு, வழக்கை தள்ளுபடி செய்தார்.






## வடகிழக்கு பருவமழை குறித்து திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே அதிரடி ஆய்வு

திருப்பூர், அக்.24-

திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே அவர்கள் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு திருப்பூர் தெற்கு ரோட்டரி மண்டபத்தில் செயல்பட்டு வரும் நிவாரண முகாம். மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் அவசரகால ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம். சந்தைபேட்டை.அம்பேத்கார் நகர் ஓடை. கஞ்சம் பாளையம் துவக்கப்பள்ளி. .காந்திநகர் ஓடை.சங்கிலி பள்ளம்ஓடை. மற்றும் நல்லாறு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வடகிழக்கு பருவமழை குறித்து வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதிக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்ட அவர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் உடன் மாநகராட்சி ஆணையாளர் எம் பி அமித்,மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன்.மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சிவப்பிரகாஷ். உதவி ஆணையாளர்கள் சக்திவேல். உதவி செயற்பொறியாளர்கள் ஹரி. ஆறுமுகம். இளம் பொறியாளர்கள் ரமேஷ்குமார்.

சுரேஷ்,சிவக்குமார், மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்...

## மாணவர் பத்திரிகையாளர் திட்டம்

பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்காக....

**உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!**

சமூகத்தில் அன்றாடம் நிகழும் கொடுமைகள், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக அரங்கேறும் செயல்பாடுகள்,

தங்கள் பகுதிகளில் இது போல் நடக்கும் சட்டத்திற்கெதிரான சம்பவங்களையும், அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெறாத அவல நிலைகளையும் ""சக்கர வியூகம்"" மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தில் இணைந்து எங்களுக்கு அனுப்புங்கள்

**உண்மை தன்மையறிந்து பிரசுரிக்கப்படும்**

எனவே, பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கனவிலுள்ள மாணவ, மாணவியர் கீழ்க்கண்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சக்கர வியூகம் பத்திரிகை முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப படிவத்திற்கு ஸ்கேன் செய்யவும்.

FOUNDER / EDITOR
SAKKRA VIYUGAM INVESTIGATE DAILY
HO: #70/53 A1, THILAGAR NAGAR 1ST ST,
ANUPPARPALAYAM, TIRUPPUR-641652
WWW.SAKKRAVIYUGAM.COM
88705 00000

## ஆத்தூர் தொகுதியை சேர்ந்தவர்கள் முறையாக அரசு பணிக்கு விண்ணப்பித்துவிட்டு கோரிக்கை மனு கொடுக்க வேண்டும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள்

### தமிழக வாழ்வுரிமை கட்சி மாநில மகளிர் அணி தலைவி முத்துலெட்சுமி வீரப்பன் அமைச்சரிடம் கோரிக்கை மனு கொடுத்தவுடன் உடனே நிறைவேற்றினார்

சின்னாளபட்டி, அக்.24

ஆத்தூர் தொகுதியை சேர்ந்தவர்கள் முறையாக அரசு பணிக்கு விண்ணப்பித்துவிட்டு கோரிக்கை மனு கொடுக்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்ததுடன் தகுதி உள்ளவர்களுக்கு ஒருபைசா செலவில்லாமல் அரசு பணி இல்லம் தேடி வரும் என்றார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் கோரிக்கை மனுக்கை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். ஒரு சிலர் தங்களின் பிள்ளைகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்த போது, அவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்ற அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தகுதியுள்ளவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் இல்லம் தேடி வரும் என்றார். ஒருசிலர் தங்கள் பிள்ளைகளின் கல்வித்தகுதி மற்றும் எந்த துறையில் வேலைவாய்ப்பு என்பது தெரியாமல் அரசு பணி வேண்டுமேன கோரிக்கைமனு கொடுக்கிறார்கள். முறையாக அரசு பணிக்கு விண்ணப்பித்துவிட்டு கோரிக்கை மனு கொடுக்க வேண்டுமென வேண்டுகோள்விடுத்ததுடன் அரசு பணி ஒருபைசா செலவில்லாமல் இல்லம் தேடி வரும் என்றார்.



அப்போது தமிழக வாழ்வுரிமை கட்சி மாநில மகளிர் அணி தலைவியும் சந்தன வீரப்பன் அவர்களின் மனைவியுமான முத்துலெட்சுமி வீரப்பன் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தார். கோரிக்கை உடனடியாக நிறைவேற்றி கொடுத்ததற்கு மனதார நன்றி தெரிவித்தார். அதன்பின்னர் தொடர்ந்து ஆத்தூர் தொகுதி மக்களிடம் மனுக்களை பெற்று நிவர்த்தி செய்தார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், சீவல்சரகு ராஜேந்திரன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், கன்னிவாடி, தனலெட்சுமி சண்முகம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், துணை அமைப்பாளர் வேலவா கமலக்கண்ணன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, அகரம் பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் ஜெயபால், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, தமிழக வாழ்வுரிமை கட்சி ஒன்றிய தலைவர் வெள்ளோடு வேளாங்கண்ணி, செயலாளர் பாலமுருகன், தொகுதி பொருப்பாளர் கல்லுப்பட்டி ரமேஷ், திமுக நகர சிறுபான்மை யினர் அணி துணை அமைப்பாளர் என்.நஜீப், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், ஜான்பீட்டர் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## மாநில அளவிலான மாரத்தான் போட்டி திசையன்விளை வி .எஸ் .ஆர். மெட்ரிக் பள்ளி மாணவி சாதனை

திசையன்விளை. அக்.24

சென்னையில் நடந்த மாநில அளவில் நடைபெற்ற தொடர் ஓட்டத்தில் நான்காம் இடம் பெற்று திசையன்விளை வி .எஸ்..ஆர். பள்ளி மாணவி சாதனை. மாநில அளவில் மாரத்தான் சென்னையில் பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டியில் நடைபெற்றது. போட்டியை சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமை ஏற்று தொடங்கி வைத்தார். "போதைப்பொருள் இல்லாத நாளை" என்ற நோக்கத்திற்காக 6 கிலோமீட்டர் ஓட்டப்பந்தயமான இப்போட்டியை"யூனிட்டி ரன் மாரத்தான்" நடத்தியது. இந்த நிகழ்வு போதைப்பொருள் இல்லாத சமூகத்திற்கான



விழிப்புணர்வை ஏற்படுத்தும் இயக்கத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது. இப்போட்டியில் திசையன்விளை வி.எஸ்.ஆர் . பள்ளி மாணவி எல். அபிநயா கலந்துகொண்டு மாநில அளவில் நான்காம் இடத்தை பிடித்து சாதனை படைத்தார். அமைச்சர் மா. சுப்பிரமணியன் வெற்றி பெற்ற மாணவிக்கு பதக்கமும், சான்றிதழும் வழங்கினார். மாநில அளவில் வெற்றி பெற்று சாதனை படைத்து பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவியை தாளாளர் வி .எஸ் .ஆர். ஜெகதீஷ் வாழ்த்தி பாராட்டி விருதுகளை வழங்கினார் .மேலும் துணை முதல்வர் விஜயா தினகரன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.




# தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஆர்ஜேடி முன்னாள் தலைவர் பாஜகவில் இணைந்தார்

பாட்னா, அக்.24-

மோசடி வழக்கில் சிபிஐ நீதிமன்றம் குற்றவாளி எனத் தீர்ப்பளித்ததால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிஹார் சட்டப்பேரவையில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஆர்ஜேடி முன்னாள் தலைவர் அனில் சஹானி பாஜகவில் இணைந்தார்.

ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியின் முக்கிய தலைவராக இருந்த அனில் சஹானி, பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான பாஜகவின் பொறுப்பாளரான மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் மற்றும் அக்கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் வினோத் தவ்டே முன்னிலையில் நேற்று பாஜகவில் இணைந்தார்.

2012 ஆம் ஆண்டு ஆர்ஜேடி கட்சியின் சார்பில் ராஜ்யசபா எம்.பி.யாக இருந்தபோது, பயணங்களை மேற்கொள்ளாமலேயே போலி விமான டிக்கெட்டுகளை சமர்ப்பித்து சலுகைகளை பெற்ற குற்றச்சாட்டில் டெல்லி சிபிஐ நீதிமன்றம் அனில் சஹானியை 2022ஆம் ஆண்டு குற்றவாளி என்று தீர்ப்பளித்தது. இதன் காரணமாக பிஹார் எம்எல்ஏவாக இருந்த அவர் தகுதிநீக்கம் செய்யப்பட்டார்

அனில் சஹானி 2020ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் குர்ஹானி தொகுதியில் இருந்து பாஜகவின் கேதார் குப்தாவை 712 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றி பெற்றார். 2022 ஆம் ஆண்டு சஹானி தகுதி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் நடைபெற்ற இடைத்தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிட்ட கேதார் குப்தா வெற்றி பெற்று அமைச்சரானார்.

அனில் சஹானி பாஜகவில் இணைந்துள்ளதால், அவரது சொந்த மாவட்டமான முசாபர்பூரில் கணிசமான எண்ணிக்கையில் உள்ள மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த 'நிஷாத்' சமூகத்தின் வாக்குகளை கவரலாம் என பாஜக நம்பிக்கையில் உள்ளது.

# பூண்டி ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு விநாடிக்கு 4,500 கன அடியாக அதிகரிப்பு

திருவள்ளூர்/காஞ்சி, அக்.24-

வடகிழக்கு பருவமழை தீவிரம் காரணமாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து அதிகரித்துள்ளதால், சென்னை குடிநீர் ஏரிகளான பூண்டி ஏரியில் இருந்து, விநாடிக்கு 4,500 கன அடி, புழல் ஏரியில் இருந்து, விநாடிக்கு 750 கன அடி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

வடகிழக்கு பருவ மழை காரணமாக சென்னை குடிநீர் ஏரிகளில் ஒன்றான பூண்டி ஏரிக்கு, நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அதிகளவில் நீர் வரத்து தொடங்கியதால், பூண்டி ஏரி முழு கொள்ளளவை எட்டும் நிலையில் இருந்ததால், பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த 15ம் தேதி மதியம் முதல் பூண்டி ஏரியில் இருந்து உபரிநீர் வெளியேற்றப் படுகிறது.



நேற்று காலை 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு மற்றும் 35 உயரம் கொண்ட பூண்டி ஏரியின் நீர் இருப்பு, 2,536 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்ட உயரம், 33.05 அடியாகவும், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து விநாடிக்கு 2,510 கன அடியாகவும் இருந்தது.

ஆகவே, நேற்று காலை 10 மணியளவில், பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு விநாடிக்கு 4,500 கன அடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது. சென்னைக்கு குடிநீர் தரும் மற்றொரு ஏரியான புழல் ஏரிக்கு, வடகிழக்கு பருவமழையால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து உள்ளது. ஆகவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த 15ம் தேதி மதியம் முதல் புழல் ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நேற்று காலை 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு மற்றும் 21.20 அடி உயரம் கொண்ட புழல் ஏரியின் நீர் இருப்பு 2,745 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்ட உயரம் 18.67அடியாகவும், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து விநாடிக்கு 860 கன அடியாகவும் இருந்தது. நேற்று மதியம் 2 மணியளவில், புழல் ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு விநாடிக்கு 750 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியில், உள்ள நந்திவரம் ஏரி நிரம்பி குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்துள்ளது. கூடுவாஞ்சேரி அருகே காயரம்பேடு ஊராட்சி, விஷ்ணு பிரியா நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள், பொன்மார் ஊராட்சியில் பல இடங்களில் மழைநீர் சூழ்ந்துள்ளது.

தாம்பரம், அதன் சுற்றுவட்டார பகுதிகள், காரணைபுதுச்சேரி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகள், பெருமாட்டு நல்லூர் ஊராட்சியிலுள்ள, செல்வி நகர் பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை செங்கல்பட்டு ஆட்சியர் சினேகா நேற்று பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த நீர் கொள்ளளவு 3,645 மில்லியன் கன அடி ஆகும். இதன் முழு நீர்மட்டம் உயரம் 24 அடி ஆகும். தொடர்ந்து பெய்து வரும் மழை மற்றும் கிருஷ்ணா நீர் வரத்து காரணமாக ஏரியின் நீர் மட்டம் 21 அடியை நெருங்கியது. நேற்று ஏரியில் இருந்து, விநாடிக்கு 500 கன அடி உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அடையாறு ஆற்றின் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஏரியில் இருந்து நீர் வெளியேற்றப்படுவதை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கந்தசாமி, ஆட்சியர் கலைச்செல்வி, சட்டப்பேரவை உறுப்பினர் செல்வப்பெருந்தகை ஆகியோர் பார்வையிட்டனர்.

# நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி: தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை



புதுடெல்லி, அக்.24-

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை மேற்கொள்வது தொடர்பாக அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார்.

பிஹாரில் அண்மையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள தமிழகம், கேரளா, மேற்கு வங்கம், புதுச்சேரி, அசாம் ஆகிய மாநிலங்களில் எஸ்ஐஆர் பணியை மேற்கொள்ள ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த 5 மாநிலங்களோடு சேர்த்து நாடு முழுவதும் எஸ்ஐஆர் பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்நிலையில், அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளின் 2 நாள் மாநாடு டெல்லியில் நேற்று பிற்பகல் தொடங்கியது.

இதில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்று உள்ளனர்.

இதுகுறித்து தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறும்போது, ''நாடு முழுவதும் எஸ்ஐஆர் பணியை மேற்கொள்வது தொடர்பாக மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படுகிறது. இதில் எஸ்ஐஆர் பணியை எப்போது தொடங்குவது, எவ்வாறு பணிகளை மேற்கொள்வது என்பன குறித்து விவாதிக்கப்படுகிறது'' என தெரிவித்தன.

# அக்டோபர் மாதத்தில் தினசரி யுபிஐ பரிவர்த்தனை ரூ.94 ஆயிரம் கோடியாக உயர்வு



புதுடெல்லி, அக்.24-

இந்தியாவில் இணையவழியில் மேற்கொள்ளப்படும் ஒட்டுமொத்த பணப் பரிவர்த்தனையில் யுபிஐ 85% பங்கு வகிக்கிறது. இது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தீபாவளி பண்டிகை காரணமாக நடப்பு அக்டோபர் மாதத்தில் அதிகபட்சமாக ஒரே நாளில் யுபிஐ பரிவர்த்தனை எண்ணிக்கை 74 கோடியைத் தாண்டி உள்ளது. இதுபோல, அதிகபட்சமாக தினசரி யுபிஐ பரிவர்த்தனை மதிப்பு இதுவரை 6 முறை ரூ.1 லட்சம் கோடியைத் தாண்டி உள்ளது. அதேநேரம் சராசரி தினசரி யுபிஐ பணப் பரிவர்த்தனையின் மதிப்பு இதுவரை இல்லாத வகையில் ரூ.94 ஆயிரம் கோடியாக அதிகரித்து புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இது கடந்த செப்டம்பர் மாதத்தைவிட 13% அதிகம். யுபிஐ பரிவர்த்தனையை நிர்வகிக்கும் இந்திய தேசிய பணப்பட்டுவாடா கழக (என்பிசிஐ) புள்ளிவிவரத்தின் மூலம் இது தெரியவந்துள்ளது. இந்த மாதத்தின் முடிவில் யுபிஐ பரிவர்த்தனை ரூ.28 லட்சம் கோடியைத் தாண்டி புதிய சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை ஒரு மாத அதிகபட்ச யுபிஐ பரிவர்த்தனை ரூ.25 லட்சம் கோடியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பட்டியல், பழங்குடியினர் நடத்தும் நிறுவனங்களிடம் 5% பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும்: தமிழ்நாடு அரசு




சென்னை, அக்.24-

பட்டியல், பழங்குடியினர் நடத்தும் நிறுவனங்களிடம் 5% பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும். 5சதவீதம் கொள்முதல் செய்தது தொடர்பான டெண்டர் விவரங்களை 3 மாதத்திற்கு ஒருமுறை அறிக்கையாக தர வேண்டும் என அனைத்து மாவட்ட அட்சியர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு செலவீன செயலாளர் கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் இடெண்டர் மூலம் பொருட்களை கொள்முதல் செய்கின்றன.

# நாகை கொள்முதல் நிலையங்களில் தேங்கிய நெல் மூட்டைகளை இயக்கம் செய்யும் பணி தீவிரம்



நாகை, அக்.24-

நாகை மாவட்டத்தில் கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை சேமிப்புக் கிடங்குக்கு இயக்கம் செய்யும் பணி தொடங்கி தீவிரம் நடைபெற்று வருகிறது.

நாகை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5,000 ஏக்கரில் மட்டும் குறுவை சாகுபடி செய்யப்பட்ட நிலையில், நிகழாண்டு மேட்டூரில் இருந்து உரிய காலத்தில் (ஜூன் 12) தண்ணீர் திறக்கப்பட்டதால், 1.10 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்தில் மொத்தம் 124 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் நாளொன்றுக்கு ஆயிரம் நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப் படுகின்றன. ஆனாலும், அதிக விளைச்சல் காரணமாக விவசாயிகள் கொண்டுவந்த நெல் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன.

இந்நிலையில், தீபாவளி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் லாரிகள் மூலம் இயக்கம் செய்யப்படாததால், கொள்முதல் நிலையங்களில் அதிகளவில் நெல் மூட்டைகள் தேங்கியுள்ளன. இவை மழையில் நனைந்து முளைவிடத் தொடங்கியுள்ளன.

மேலும், கொள்முதல் நிலையத்தில் மூட்டைகள் தேக்கம் அடைந்ததால், மேற்கொண்டு கொள்முதல் நடைபெறுவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அறுவடை செய்த நெல் மூட்டைகளுடன் 10 நாட்களுக்கு மேலாக காத்திருப்பதாகவும், அந்த நெல்மணிகள் மழையில் நனைந்து முளைவிட்டு சேதமடைந்து வருவதாகவும் விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வயல்கள் மற்றும் நெல் கொள்முதல் நிலையங்களை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி நேற்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இதற்கிடையே, மாவட்ட நிர்வாகம் உடனடியாக நெல் கொள்முதல் நிலையங்களுக்கு லாரிகளை அனுப்பி, நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்லும் பணி தொடங்கி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த பணிகள் குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது: நெல் கொள்முதல் நிலையங்களில் இத்தனை நாட்களாக நெல் மூட்டைகளை இயக்கம் செய்யாமல், எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார் என்றதும் அவசர அவசரமாக இயக்கம் செய்யும் பணியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து முளைவிட்டிருக்கும் நிலையில், அவற்றை வேறு சாக்குகளுக்கு மாற்றி ஏற்றிச் செல்கின்றனர். அதேபோல், நெல் மூட்டைகளை உடனுக்குடன் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றனர்.

# கரூரில் மழையால் சேதமடைந்த ரேஷன் கடை பாதை உடனடியாக சீரமைப்பு: பொருட்களை விநியோகித்தார் செந்தில்பாலாஜி



கரூர், அக்.24-

மழையால் சேதமடைந்த புதிய பகுதிநேர ரேஷன் கடைப் பாதை உடனடியாக சீரமைக்கப்பட்டது. கடையை திறந்து வைத்து, பொருட்களை முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி வழங்கினார்.

கரூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட கரூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் புதிதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடங்கள், புதிய பகுதிநேர ரேஷன் கடை, புதிய தார் சாலை பணிகள் உள்ளிட்ட ரூ.4.21 கோடியிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய பணிகளை தொடங்கி வைக்கும் விழா இன்று (அக்.23ம் தேதி) நடைபெற்றது.

கரூர் ஊராட்சி ஒன்றியம் ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி நத்தமேட்டில் புதிய பகுதிநேர ரேஷன் கடை திறப்பு விழா நடைபெற்றது. இதற்காக அப்பகுதியில் உள்ள நாடக மேடையில் தற்காலிகமாக பகுதி நேர ரேஷன் கடை அமைக்கப்பட்டிருந்தது.

இப்பகுதியில் நேற்றிரவு பெய்த கனமழையால் பகுதி நேர கடை திறக்கப்பட உள்ள நாடக மேடைக்கு செல்லும் வழி சேறும், சகதியுமாக மாறியிருந்தது. இதையடுத்து உடனடியாக அப்பகுதியில் இருந்து சேறு மண் வெட்டி மூலம் அகற்றப்பட்டு, பொக்லைன் மூலம் கிராவல் மண் கொட்டப்பட்டு, தார் பாய் விரிக்கப்பட்டு பகுதி நேர ரேஷன் கடைக்கு செல்லும் பாதை சீரமைக்கப்பட்டது.

இதனால் விழா நடைபெறும் இடத்திற்கு சுமார் 24 நிமிடங்கள் தாமதமாக வந்த முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அங்கு ஆரத்தி எடுக்க திரண்டிருந்த பெண்கள் நெற்றியில் திலகமிட்டதை ஏற்று, ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் புதிய பகுதிநேர ரேஷன் கடையை ரிப்பன் வெட்டி திறந்து, குத்து விளக்கேற்றி, ரேஷன் பொருட்களை வழங்கினார்.

அரவக்குறிச்சி எம்எல்ஏ ரா.இளங்கோ, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், கரூர் கோட்டாட்சியர் முகமதுபைசல், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன் வட்டாட்சியர்கள் மோகன்ராஜ், சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து காந்தி நகர் பிசி குடியிருப்பு பகுதியில் ரூ.45.44 லட்சம், பட்டியலின குடியிருப்பு பகுதியில் ரூ.62.70 லட்சத்தில் தார் சாலையினை பலப்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்தார். தொடர்ந்து பிற பகுதிகளிலும் பணிகளை தொடங்கி வைத்தார்.

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதை இந்தாண்டு இறுதிக்குள் இந்தியா நிறுத்திவிடும்: ட்ரம்ப் மீண்டும் பேச்சு



வாஷிங்டன், அக்.24-

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா பெரும்பாலும் நிறுத்திவிடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேற்று (அக். 22) செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தப் போவதாக இந்தியா என்னிடம் ஏற்கனவே கூறியது உங்களுக்கும் தெரியும். இது ஒரு செயல்முறை. திடீரென நிறுத்த முடியாது. இந்த ஆண்டு இறுதிக்குள் ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை இந்தியா பெரும்பாலும் நிறுத்திவிடும். 40% அளவுக்கு நிறுத்தி விடுவார்கள். இந்தியாவின் செயல்பாடு மிகச் சிறப்பானது. பிரதமர் மோடியுடன் நேற்று நான் பேசினேன். உண்மையில் அவர்கள் மிகவும் சிறப்பானவர்கள்." என தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த 16ம் தேதி வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய டொனால்ட் ட்ரம்ப், "ரஷ்யாவிடம் இந்தியா எண்ணெய் வாங்குவதில் நான் மகிழ்ச்சியடையவில்லை. ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்க மாட்டோம் என்று மோடி எனக்கு உறுதியளித்தார். உங்களுக்குத் தெரியும், இதை உடனடியாக செய்ய முடியாது. இது ஒரு சிறிய செயல்முறை, ஆனால் செயல்முறை விரைவில் முடிவடையும்.

ரஷ்யாவை பொருளாதார ரீதியாக தனிமைப்படுத்த இது ஒரு பெரிய படி. இப்போது சீனாவையும் அதையே செய்ய வைக்கப் போகிறோம். மோடி ஒரு சிறந்த மனிதர். அவர் ட்ரம்ப்பை நேசிக்கிறார். நான் அவரது அரசியல் வாழ்க்கையை அழிக்க விரும்பவில்லை.

நான் பல ஆண்டுகளாக இந்தியாவைப் பார்த்து வருகிறேன். அது ஒரு நம்பமுடியாத நாடு, ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ஒரு புதிய தலைவர் அங்கு இருப்பார். ஆனால், என் நண்பர் மோடி நீண்ட காலமாக அங்கு தலைவராக இருக்கிறார்'' என தெரிவித்திருந்தார்.

ட்ரம்ப்பின் கருத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உடனடியாக மறுத்தது. இது தொடர்பாக அதே 16ம் தேதி வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் வெளியிட்ட அதிகாரப்பூர்வ பதிவில், "எண்ணெய் மற்றும் எரிவாயுவை கணிசமாக இறக்குமதி செய்யும் நாடு இந்தியா. சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை நிலையற்றதாக உள்ள நிலையில், இந்திய நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதே எங்களின் தொடர்ச்சியான முன்னுரிமையாக இருந்து வருகிறது. இந்த அடிப்படையில்தான் எங்களின் இறக்குமதி கொள்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

நிலையான எண்ணெய் விலை, பாதுகாப்பான விநியோகம் ஆகியவையே இந்தியாவின் எரிசக்தி கொள்கையின் இரட்டை இலக்குகளாகும். இந்தியாவின் எரிசக்தி ஆதாரங்களை விரிவுபடுத்துவதும், சந்தை நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்ப பல்வகைப்படுத்துவதும் இதில் அடங்கும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, அந்நாட்டிடம் இருந்து எரிசக்தி கொள்முதலை விரிவுபடுத்த பல ஆண்டுகளாக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். கடந்த 10 ஆண்டுகளாக இதில் சீரான முன்னேற்றம் இருந்து வருகிறது. தற்போதைய நிர்வாகம், இந்தியாவுடன் எரிசக்தி ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதில் ஆர்வம் காட்டி இருக்கிறது. இது தொடர்பாக விவாதங்கள் நடந்து வருகின்றன.'' என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



■ திருச்சி காஜா நகர் பகுதியில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ.நிதியின் கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி நடைபெறவுள்ளதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.அப்போது மாநகராட்சி ஆணையர்லி.மதுபாலன், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள திருச்சி மாநகராட்சி தயார் மேயர் அன்பழகன்

திருச்சி, அக்.24-

திருச்சி மாநகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது தொடர்பாக 5 மண்டலங்களிலும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள மின்மோட்டார்கள் , ஆயில் இன்ஜின்கள், மரம் அறுக்கும் இயந்திரம் மற்றும் சுகாதார பணிகளுக்கு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் ஆகியவை தயார் நிலையில் இருப்பதை மாண்புமிகு மேயர் மு.அன்பழகன், மண்டல குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுபினர்கள், அலுவலர்களுடன் பார்வையிட்டார்கள். மழை அதிக அளவு பெய்தால் மழை நீரை உடனடியாக வெளியேற்றுவதற்கான முன்னெடுப்பாடு பணிகள் தயார் நிலையில் இருப்பதாக மேயர் தெரிவித்தார்கள்.மேலும், மாநகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது தொடர்பாக மாநகராட்சி பகுதிகளில் அதிகளவு தண்ணீர் தேங்கும் டோபி காலனி , ராஜீவ் காந்தி நகர் , ஆதிநகர் , பாத்திமா நகர் , ஏயுடி நகர் , கிருஷ்ணாபுரம் , எம்எஸ்.காலாணி கோரை ஆறு சொசைட்டி காலனி, துளசிங்க நகர் ஆகிய இடங்களில் பெரிய வாய்க்கால் பகுதிலிருந்து தண்ணீர் வராமல் தடுக்க புதிதாக தடுப்பு சட்டர் அமைக்கப்பட்டுள்ளது. தண்ணீரை உடனடியாக அகற்ற 20 எச்பி மின் மற்றும் டீசல் மோட்டார் கொண்ட பம்பிங் ஸ்டேசன் அமைக்கப்பட்ள்ளது. தாழ்வான பகுதிகளில் நீர் தேங்குதல், மரக்கிளைகள் உடைந்து விழுதல், போக்குவரத்து தடை போன்றவற்றை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் உடனுக்குடன் செய்ய வேண்டும் மழைநீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து உடனுக்குடன் அகற்றுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மண்டல தலைவர்கள் துர்கா தேவி, விஜயலட்சுமி கண்ணன் மற்றும் உதவி ஆணையர்கள் சண்முகம், சென்னு கிருஷ்ணன், உதவிசெயற் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பல்வேறு நகரங்களில் இருந்து சென்னைக்கு 2,900 சிறப்பு பேருந்துகள்

சென்னை, அக்.24-

தீபாவளி பண்டிகைக்காக சென்னையில் வசிக்கும் வெளியூர் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்றனர். பண்டிகை முடிந்து அவர் மீண்டும் சென்னை திரும்ப நேற்று முன்தினம் முதல் தமிழக போக்குவரத்து துறை சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பல்வேறு ஊர்களில் இருந்து சென்னைக்கு தினமும் 2,092 பேருந்துகள் இயக்கப்படும். அதனுடன் கூடுதலாக நேற்று முன்தினம் 2,048 பேருந்துகளும், நேற்று 2,392 பேருந்துகளும் இயக்கப்பட்டன.

பல்வேறு ஊர்களில் இருந்து கோவை, திருச்சி, மதுரை போன்ற பிற முக்கிய நகரங்களுக்கு நேற்று முன்தினம் 2,245 பேருந்துகளும், நேற்று 1,485 பேருந்துகளும் இயக்கப்பட்டன.

பெரும்பாலான மக்கள் கடந்த 2 நாட்களிலேயே சென்னை திரும்பி இருப்பார்கள் என்பதால் இன்று கூடுதலாக 813 பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகிறது. வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 813 பேருந்துகள் என மொத்தம் 2,905 பேருந்துகள் இன்று இயக்கப்படுகின்றன. பிற முக்கிய நகரங்களுக்கு இன்று 870 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

# சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவிலான ஹேண்ட்பால் போட்டியில் தொடர் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டிக்கு தேர்வு பெற்றனர் 2025 - 2026

## திண்டுக்கல் எம்.எஸ்.பி.சோலைநாடார் பள்ளி அணியை 3போட்டிகளில் வீழ்த்தி ஹேட்ரிக் சாதனை படைத்தனர்



சின்னாளபட்டி, அக்.24-

சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவிலான ஹேண்ட்பால் போட்டியில் தொடர் வெற்றி பெற்று (2025 -2026) மாநில அளவிலான போட்டிக்கு தேர்வு பெற்றனர் திண்டுக்கல் எம்.எஸ்.பி.சோலைநாடார் பள்ளி அணியை 3போட்டி களிலும் வீழ்த்தி ஹேட்ரிக் சாதனை படைத்தனர்.

திண்டுக்கல் மாவட்ட பள்ளிக்கல்விதுறை சார்பாக திண்டுக்கல் வருவாய் மாவட்ட அளவிலான ஹேண்ட்பால் போட்டிகள் சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 14.10.2025, 15.10.2025 ஆகிய நாட்களில் மாணவிகளுக்கும், 16.10.2025, 17.10.2025 மற்றும் 23.10.2025 ஆகிய நாட்களில் மாணவர்களுக்கும் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகள் இறுதி போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டது. இறுதி போட்டியில் சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்களும், திண்டுக்கல் எம்.எஸ்.பி.சோலை நாடார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் போட்டியிட்டனர். 19 வயதிற்குட்பட்ட சூப்பர் சீனியர் சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 33ஃ14 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றனர். தொடர்ந்து நடைபெற்ற 17 வயதிற்குட்பட்ட சீனியர் மாணவர்கள் பிரிவில் சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 29ஃ9 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றனர். இதுபோல 14 வயதிற்குட்பட்ட ஜீனியர் மாணவர்கள் பிரிவில் சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 25ஃ8 என்ற புள்ளி கணக்கில் தொடர் வெற்றி பெற்றனர். இம்மூன்று பிரிவினரும் மாநில அளவிலான ஹேண்ட்பால் போட்டிக்கு தேர்ச்சி பெற்றுள்ளனர். 19 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான ஹேண்ட்பால் போட்டி நவம்பர் மாதம் திருவண்ணாமலையிலும் 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான ஹேண்ட்பால் போட்டிகள் டிசம்பர் மாதம் திருச்சியிலும் 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான ஹேண்ட்பால் போட்டி ஜனவரி மாதம் ராணிப்பேட்டையில் நடைபெற உள்ளது. மூன்று பிரிவில் நடைபெற்ற ஹேண்ட்பால் போட்டிகளில் ஹேட்ரிக் சாதனை படைத்த விளையாட்டு வீரர்களை சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளரும், சேரன் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார், சேரன் பள்ளி முதல்வரும், சேரன் அறக்கட்டளை அறங்காவலருமான என்.திலகம் மற்றும் பள்ளி மேலாளரும் அறங்காவலருமான பா.பாரதிராஜா, அறங்காவலர்களான ஜெ.ஆல்பிரட் எங், சி.அபிஷேக் மற்றும் ஹேண்ட்பால் பயிற்றுநர்கள் என்.அசோக் குமார், டி.செந்தில்குமார், சி.ஆரோக்கியரஞ்சனி ஆகியோர்களும், பள்ளி ஆசிரியர்களும், அலுவலக பணியாளர்களும் பாராட்டி வாழ்த்தினார்கள்.




மதுரை நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்து இளம் மாணவர்களின் மனங்களில் தமிழ் உணர்வினை வளர்க்கும் மதுரை தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி, அல் அமீன் மேல்நிலைப்பள்ளி, ஏ.பி.டி துரைராஜ் மேல்நிலைப்பள்ளி, அப்பர் மேல்நிலைப்பள்ளிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை உலகத் தமிழ்ச் சங்கம் கூட்டரங்கில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி உலகத் தமிழ்ச் சங்கம் துணைத் தலைவர்இயக்குநர் முனைவர்.இ.சா.பர்வீன் சுல்தான் இலக்கியம் மற்றும் ஆன்மிக சொற்பொழிவாளர் சுகி.சிவம் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் திருச்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி மண்டல 3க்கு உப்பட்ட 16வது வார்டில் வண்ணாந்துறை குடியிருப்பு பகுதிகளில் மழை நீரால் சேதம் அடைந்த பகுதிகளை மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.

# திருச்சியில் வழக்கறிஞர்களுக்கு கபசுர குடிநீர் குற்றவியல் வழக்கறிஞர் சங்க செயலாளர் வெங்கட்



திருச்சி, அக்.24-

குற்றவியல் வழக்கறிஞர் சங்க செயலாளர் வெங்கட் வெளியிட்டுள்ள அறிக்கையில்: தற்போது ஏற்பட்டுள்ள திடீர் பருவ கால மாற்றத்தால், தொடர் மழையால் காய்ச்சல் மற்றும் ஜலதோஷம் பரவி வருவதால் வழக்கறிஞர்களின் நலன் கருதி நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் குற்றவியல் வழக்கறிஞர் சங்கத்தில் கபசுர குடிநீர் வழங்கப்படும். அது சமயம் நமது வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் பருகி பயன்பெறுமாறு அந்த அறிக்கையில் குற்றவியல் வழக்கறிஞர் சங்க செயலாளர் பி.வி.வெங்கட்கேட்டுக்கொண்டுள்ளார்.




# திருச்சி தேசிய தேசியக் கல்லூரியில் விலங்கியல் சங்கத்தின் கூட்டம்

திருச்சி, அக்.24-

தேசியக் கல்லூரியில் இளங்கலை ஆய்வகம், முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை விலங்கியல், தேசிய கல்லூரி (தன்னாட்சி), வளர்ச்சியாளர்: சுரேஷ், மீன்வள ஆலோசகர், வசந்த மீன்வ ளம், திருச்சி.

தலைப்பு: “மீன்வளத் தொழிலில் தொழில்முனைவோர் வாய்ப்புகள்” அறிக்கை விலங்கியல் சங்கத்தின் இரண்டாவது கூட்டம், திருச்சி தேசிய கல்லூரியின் விலங்கியல் துறையின் சார்பில் திருச்சி, வசந்த

மீன்வளத்தின் மீன்வள ஆலோசகர் வே. சுரேஷ், இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, “மீன்வளத் துறையில் தொழில்முனைவோர் வாய்ப்புகள்” என்ற தலைப்பில் ஒரு ஊக்கமளிக்கும் மற்றும் நுண்ணறிவுள்ள உரையை நிகழ்த்தினார்.

இந்தியாவில் மீன்வளத் துறையின் வளர்ந்து வரும் நோக்கத்தை திரு. வே. சுரேஷ் எடுத்துரைத்தார். மேலும் இளம் விலங்கியல் வல்லுநர்கள் இந்தத் துறையில் தொழில்முனைவோரை ஆராய்வதற்கான பல்வேறு வழிகளைப் பற்றி விவாதித்தார். வீடுகளில் மீன்வளங்களை அமைப்பதன் அறிவியல் மற்றும் அழகியல் அம்சங்களை அவர் விரிவாகக் கூறினார், மீன்வளங்கள் அலங்காரக் கூறுகளாக மட்டுமல்லாமல் மன நலனையும் தளர்வையும் எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பதை வலியுறுத்தினார்.

மீன்வள வடிவமைப்பு, வடிகட்டுதல் அமைப்புகள், நீர்வாழ் தாவர மேலாண்மை மற்றும் மீன் சுகாதாரப் பராமரிப்பு ஆகியவற்றின் அடிப்படைகளை அவர் விளக்கினார், மேலும் மீன்வளம் மற்றும் அலங்கார மீன் வளர்ப்பை ஒரு பொழுதுபோக்காகவும் சாத்தியமான வணிக வாய்ப்பாகவும் பார்க்க மாணவர்களை ஊக்குவித்தார். நீர்வாழ் பல்லுயிர் பெருக்கத்தைப் பராமரிப்பதிலும், பூர்வீக அலங்கார இனங்களைப் பாதுகாப்பதிலும் நிலையான நடைமு றைகளின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அமர்வு மிகவும் தகவலறிந்ததாக இருந்தது மற்றும் அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை விலங்கியல் மாணவர்களின் உற்சாகமான பங்கேற்பைக் கண்டது. சங்கத்தின் துணைத் தலைவர் டாக்டர் ஆ. ஸ்டாலின் வரவேற்றார்., துறைத் தலைவர் டாக்டர் வ.கோகுலா தலைமை வகித்தார்.முடிவில் இரண்டாம் ஆண்டு விலங்கியல் மாணவி பிரீத்தி நன்றி கூறினார்.

# புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பு: தமிழகத்தில் அக்.28 வரை மழை தொடரும்

சென்னை, அக்.24-

வங்கக்கடலில் இன்று புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் ஈரோடு, வேலூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ‘தமிழக கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலு குறைந்து, தெற்கு கர்நாடகத்தின் உள்பகுதி மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவுகிறது. இது நாளை அரபிக்கடலில் நிலவக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை வடமேற்கு திசையில் மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளை நோக்கி நகரக்கூடும். தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் தாக்கத்தால், நாளை (அக்.24) தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும். இது, நாளை வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுவடையக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் நாளை முதல் 28ம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை கோவை மாவட்ட மலை பகுதிகள், நீலகிரி, ஈரோடு, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களிலும், 26ம் தேதி திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுவையிலும், 27, 28 தேதிகளில் ராணிப்பேட்டை, திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான பெய்ய வாய்ப்புள்ளது. தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகள், தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும், இடையிடையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் 13 செமீ, தருமபுரி மாவட்டம் அரூரில் 11 செமீ, நாமக்கல் மாவட்டம் மோகனூர், நாமக்கல், நீலகிரி மாவட்டம் விண்ட் வொர்த் எஸ்டேட், திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோயிலில் தலா 9 செமீ, திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி, விழுப்புரம் மாவட்டம் அவலூர்பேட்டை, நீலகிரி மாவட்டம் கிளன்மார்கனில் தலா 8 செமீ, கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுர்க்கம், ராணிப்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் சூரப்பட்டு, கெடார், திருச்சி மாவட்டம் துவாக்குடி, நீலகிரி மாவட்டம் நடுவட்டம், பந்தலூர், சேலம் மாவட்டம் மேட்டூர், திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காடு, திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் தலா 7 செமீ மழை பதிவாகியுள்ளது’ இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



## ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரதம் மேற்கொண்டனர்: திருச்செந்தூரில் கந்தசஷ்டி விழா தொடங்கியது

தூத்துக்குடி, அக்.24-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழா யாகசாலை பூஜையுடன் நேற்று தொடங்கியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரதம் தொடங்கினர். விழாவையொட்டி நேற்று அதிகாலை ஒரு மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர், சுவாமி ஜெயந்திநாதர் வள்ளிதெய்வானை அம்மனுடன் யாகசாலையில் எழுந்தருளினார்.

கோயில் தக்கார் ரா.அருள்முருகன், இணை ஆணையர் க.ராமு ஆகியோரிடம் காப்பு கட்டிய சோமாஸ் கந்தர் பட்டர் தாம்பூலம் பெற்று, யாகசாலை பூஜையை தொடங்கினார். பின்னர், விக்னேஸ்வர பூஜை, கும்ப பூஜை, ஹோம பூஜைகள் நடைபெற்றன.

மூலவர் மற்றும் சண்முகருக்கு உச்சிகால தீபாராதனைக்கு பின்னர் யாகசாலையில் சுவாமி ஜெயந்திநாதருக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர் சுவாமி ஜெயந்திநாதர் வள்ளிதெய்வானையுடன் தங்க சப்பரத்தில் எழுந்தருளி சண்முக விலாச மண்டபம் சேர்ந்தார்.

அங்கு சுவாமிக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர், சுவாமி திருவாவடுதுறை ஆதின கந்தசஷ்டி மண்டபத்துக்கு எழுந்தருளினார். தொடர்ந்து, சுவாமியும் அம்மனும் தங்க ரதத்தில் எழுந்தருளி கிரி பிரகாரம் உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அருளினர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதிகாலையிலேயே கடலில் புனித நீராடி காவி மற்றும் பச்சை நிற ஆடை அணிந்து கோயில் கிரி பிரகாரத்தில் அங்கப் பிரதட்சணம் செய்து விரதத்தை தொடங்கினர். பெண்கள் கிரி பிரகாரத்தில் அடிப் பிரதட்சணம் செய்தனர். விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் வரும் 27ம் தேதி மாலை கடற்கரையில் நடைபெறுகிறது. மறுநாள் திருக்கல்யாண வைபவம் நடைபெறுகிறது.

## வெற்றியைக் கணக்கிட்டு அதிமுக கூட்டணியில் சேர சம்மதம்! 30 தொகுதிகள் கேட்கும் அன்புமணி

சென்னை, அக்.24-

திமுக கூட்டணிக்கு எதிராக அதிமுக கூட்டணியை பலப்படுத்த நினைக்கும் பாஜக, அதற்காக முன்பு அதிமுக மற்றும் பாஜக உடன் கூட்டணியில் இருந்த கட்சிகளை எல்லாம் மீண்டும் தங்கள் பக்கம் கொண்டுவர வரிசையாக காய்நகர்த்தி வருகிறது. அந்த வகையில், பாமக தலைவர் அன்புமணியிடமும் பாஜக தரப்பிலிருந்து பக்குவமாக பேச்சுவார்த்தையைத் தொடங்கி இருக்கிறார்கள்.



கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக கூட்டணியில் அதிமுகவும் பாமகவும் அங்கம் வகித்தன. ஆனால், 2024 மக்களவைத் தேர்தலின்போது பாஜக கூட்டணியைவிட்டு அதிமுக வெளியேறி விட்டது. அப்போது பாமக நிறுவனர் ராமதாஸ் அதிமுகவுடன் கூட்டணி அமைக்க விரும்பினார்.

ஆனால், தலைவர் அன்புமணியோ பாஜக கூட்டணியை விரும்பினார். இறுதியில், அன்புமணியின் விருப்பப்படியே பாஜகவுடன் பாமக கூட்டணி அமைத்தது. அதுவரைக்கும் ராம தாஸ் அன்புமணி இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு இந்தக் கூட்டணி முடிவை அடுத்து மோதல் போக்காக மாறியது.

அது தற்போது உச்சக்கட்டத்தை அடைந்து பாமக இரண்டுபட்டுக் கிடப்பதால் அந்தக் கட்சிக்குள் குழப்பமான சூழல் நிலவி வருகிறது. அதேசமயம், மக்களவைத் தேர்தலில் ராமதாஸ் விரும்பிய அதிமுகவும், அன்புமணி விரும்பிய பாஜகவும் இப்போது ஒரே கூட்டணியில் இருப்பதால் இருவரையும் சமாதானப்படுத்தி ஒன்றுபட்ட பாமகவை தங்கள் கூட்டணியில் சேர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அதிமுகவும், பாஜகவும் தொடங்கியுள்ளன.

அதனை உறுதிப்படுத்தும் விதமாக, பாஜக தேசிய துணைத் தலைவரும், தமிழக தேர்தல் பொறுப்பாளருமான வைஜயந்த் பாண்டா எம்.பி., அண்மையில் சென்னையில் அன்புமணியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார். அவர் ராமதாஸையும் சந்தித்துப் பேசியதாகவும் கூறப்படுகிறது.

அதேபோல், விஜய்யை கூட்டணியில் சேர்க்கவும் அதிமுகவும் பாஜகவும் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. கரூர் சம்பவ நெருக்கடியால் அடுத்த அடியை எடுத்துவைக்க முடியாத நிலையில் இருக்கும் விஜய்யும் அதிமுக கூட்டணியில் இணைய வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

அதிமுக, பாஜக, தவெக கட்சிகளுடன் இன்னும் சில சிறிய கட்சிகளும் இணைந்தால் 2026 தேர்தலில் வெற்றி நிச்சயம் என்று கணக்குப் போட்டு அந்தக் கூட்டணியில் இணைய அன்புமணியும் விருப்பம் தெரிவித்துள்ளார். அதேசமயம் கட்சியை பலப்படுத்தவும், கட்சியை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லவும் தங்களுக்கு இம்முறை கணிசமான எம்எல்ஏக்கள் தேவை என்பதால் தொடக்கமே 30 தொகுதிகளை டிமாண்ட் வைத்து அன்புமணி பேச்சுவார்த்தையை தொடங்கி இருப்பதாகச் சொல்கிறார்கள்.

## நெல் கொள்முதலில் அரசின் நிலைப்பாடு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் : தமிழக பாஜக

சென்னை, அக்.24-

விவசாயம், விவசாயிகளின் நலம் காக்க, நெல் கொள்முதலில் தமிழக அரசின் நிலைப்பாடு, செயல்பாடு குறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என தமிழக பாஜக வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல்லில், அரிசி அரவையின் போது கலக்கப்பட வேண்டிய செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க, மத்திய அரசு அனுமதி அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தான், நெல் மூட்டைகள் தேங்க காரணம் என்று வடிகட்டிய பொய்யை சொல்லி மத்திய அரசு மீது அவதூறு பிரச்சாரம் செய்யும் தமிழக உணவுத் துறை அமைச்சர் சக்கரபாணி, செறிவூட்டப்பட்ட அரிசி என்றால் என்ன? இந்தத் திட்டத்தை பாரத பிரதமர் மோடி ஏன் கொண்டு வந்தார்? எதற்காக 100 கிலோவிற்கு, 1 கிலோ செறிவூட்டப்பட்ட அரிசியினை கலக்க வேண்டும் என்று மத்திய அரசு ஏன் விதிமுறைகள் வகுத்துள்ளது? என்பதை தனது வாயால், பத்திரிகையாளர்களுக்கும் தமிழக மக்களுக்கு முதலில் விளக்க வேண்டும். இதுகுறித்து போதிய அறிவு இல்லை என்றால் , மத்திய அரசின் திட்டத்தை படித்து புரிந்து தெளிவு பெற வேண்டும்.

இந்தியாவில் அரிசி உணவாக சாப்பிடும் மக்களில், வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் உள்ளிட்ட பெரும்பாலானோர், வைட்டமின் பி 12, போலிக் அமிலம் , இரும்புச்சத்து உள்ளிட்ட பிற வைட்டமின் மற்றும் தாதுப் பற்றாக்குறை மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாட்டால், நோய் எதிர்ப்பு சக்திகுறைந்து, ரத்த சோகை உள்ளிட்ட பல நோய்களால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர்.

இதனைத் தடுக்க உலகளவில் பல்வேறு ஆய்வுகளால் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட உணவு செறிவூட்டல் வழிமுறையை பின்பற்றி நாட்டின் அனைத்து மக்களுக்கும் பூரண ஆரோக்கியத்துடன் வாழ்வதற்காக ‘செறிவூட்டப்பட்ட அரிசி வழங்குதல்’ திட்டம் மத்திய மோடி அரசால் தொலை நோக்கு சிந்தனையுடன் உருவாக்கப்பட்டு இந்தியா முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025 2026 ஆம் பருவத்தில் நடப்பு கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அரவை செய்வதற்கு தேவையான செறிவூட்டப்பட்ட அரிசியை கொள்முதல் செய்திட மத்திய அரசால் 29.07.2025 அன்றே புதிய வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டும், ஏறத்தாழ 75 நாட்கள் இரண்டரை மாதங்களுக்கு மேல் ,விவசாயிகள் மக்களின் நலனை புறக்கணித்து, தீபாவளி ரேஷன் கொள்முதல் ஊழலில் வசதியாக மறந்துவிட்டு, 07.10.2025 அன்று 34,000 மெ.டன் செறிவூட்டப்பட்ட அரிசி கொள்முதல் செய்திட தமிழக அரசு தாமதமாக பணியாணை வழங்கியது ஏன்? என்பது குறித்து அமைச்சர் சக்கரபாணி விளக்கம் அளிக்க வேண்டும்.



செறிவூட்டப்பட்ட அரிசி கலக்கப்பட்டு விடும் என, இரண்டு நாட்களுக்கு முன் மத்திய அரசிடம் விண்ணப்பித்து விட்டு, இத்தனை மாதமாக நெல் மூட்டைகள் தேங்கியதற்கு மத்திய அரசுதான் காரணம் என்று விவசாயிகளையும் மக்களையும் ஏமாற்ற பார்க்கிறார். ஆனால் தமிழகத்தில் நெல் உற்பத்தி அதிகரித்ததே, நெல் மூட்டைகள் தேக்கமடைய முழு காரணம் என அமைச்சர் எம்ஆர்கே. பன்னீர்செல்வம் , தமிழக அரசின் நிர்வாகத் திறமையின்மையை மறைத்து நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் புதிய விளக்கம் அளித்துள்ளார்.

தமிழக அரசின் தவறுகளை தட்டி கேட்டால், நிர்வாக சீர்கேடுகளை சுட்டிக் காட்டினால் அமைச்சர் சக்கரபாணி கண் மண் தெரியாமல் மோடி அரசின் மீது அவதூறு பிரச்சாரம் செய்கிறார். உண்மை தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி ஏதேதோ பேசி வருகிறார் என்று நீலிக் கண்ணீர் வடித்து மத்திய, மாநில அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை கேலிக்குரியதாக்கி, கேள்விக்குறியாக்கி , மத்திய அரசு மேல் பழியை சுமத்தி நாடகமாடுவது தான் திராவிட மாடல் அரசியலா?

மத்திய அரசின் செறிவூட்டப்பட்ட அரிசி திட்டத்தின் சிறப்பை கெடுக்கும் வகையில், உண்மையை மறைத்து சம்பந்தமில்லாமல் மத்திய அரசு அளிக்க வேண்டிய அனுமதி பற்றி அவதூறு பேசி, நெல் கொள்முதலில் தமிழக அரசின் கையாலாகாததனத்தை மறைக்கப் பார்ப்பது ஏன்?

நெல் கொள்முதலை முறையாக செய்யாமல், நெல் கிடங்குகளை பராமரிக்காமல், புதிய நெல் கிடங்குகளை அமைக்காமல், தற்காலிக பாதுகாப்பான நெல் கிடங்குகள் அல்லது சர்க்கரை ஆலை கிடங்குகள், தனியார் கிடங்குகள் என எந்த முயற்சியும் செய்யாமல் மத்திய அரசின் மீது பழி போடுவது ஏன்? தமிழக முதல்வர் ஸ்டாலின் நேர்மையுடன், தமிழக மக்கள் உண்மைகளை அறிந்து கொள்ளும் வகையில், விவசாயமும் விவசாயிகளும் காப்பாற்றப்பட, இதுகுறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான முக்கியமான முன்னெடுப்பை திராவிட மாடல அரசு எடுத்துள்ளது என்று ட்விட்டரில் பெருமை பேசும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்வதை பற்றி கவலைப்படாமல், விவசாயிகளின் நலனுக்கு எதிராக திராவிட மாடல் அரசு செயல்படுவது குறித்து வாய் திறக்காதது ஏன்?

விவசாய சங்கங்களும் விவசாயிகளும் ஊடகங்களின் வாயிலாக நெல் கொள் முதல் நிலையங்களில், சட்டத்துக்கு புறம்பாக கமிஷன் கேட்டு மிரட்டிய அரசியல் இடைத்தரகர்களையும், நெல் கொள்முதல் நிலைய ஊழல்களையும் வெளிப்படையாக ஆதாரத்துடன் சுட்டி காட்டிய போதும், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்பதை தன்னுடைய ட்விட்டரில் பதிவு செய்ய வேண்டும்.

தமிழகத்தில் நெல் கொள்முதல் முறையாக நடப்பதற்கும், தமிழக மக்களின் நலம் காக்க, ரத்த சோகை நோய் இல்லாத மாநிலமாக தமிழகம் ஆரோக்கியமாக உருவாகவும், ‘செறிவூட்டப்பட்ட அரிசி’ வழங்குவதற்கு மத்திய அரசு எடுத்து வரும் முயற்சிகளை பாராட்ட விட்டாலும், அவதூறு பேசாமல், செறிவூட்டப்பட்ட அரிசிக்கான தர உறுதி ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான முயற்சிகளை விரைந்து செய்யுங்கள். தமிழக அரசின் முயற்சிகளுக்கு பாஜக துணை நிற்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## கோவை அருகே மின்கம்பத்தை சாய்த்த யானை உயிரிழப்பு

கோவை, அக்.24-

கோவை அருகே பொது தடத்தில் அமைக்கப்பட்ட மின்கம்பத்தை காட்டு யானை சாய்த்து தள்ளியதில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தது.

கோவை வனக்கோட்டம் போளுவாம்பட்டி சரகத்துக்கு உட்பட்ட, காப்புக்காட்டில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் காட்டுக்கு வெளியே குப்பேபாளையம் கிராமப் பகுதிக்கு அருகே பொதுத் தடத்தில் புதிதாக மின்கம்பங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அவ்வாறு நிறுவப்பட்ட ஒரு மின் கம்பத்தை இன்று அதிகாலை ஆண் யானை சாய்த்தது. யானை மீது மின் கம்பிகள் பட்டதில் உயிரிழந்தது. பொது தடத்தை ஒட்டியுள்ள தோட்டத்து உரிமையாளர் அதிகாலை 5 மணி அளவில் பார்த்து தகவல் அளித்ததின் பேரில் வனத்துறையினர் சம்பவத்துக்கு சென்று நடவடிக்கை மேற்கொண்டனர். உயிரிழந்த யானைக்கு 25 வயது இருக்கும் என வனத்துறை தெரிவித்தனர். பிரேதப் பரிசோரனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் திருமதி துர்காஸ்டாலின் ஆகியோரை தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தனது குடும்பத்துடன் சந்தித்து தனது மகனின் திருமண அழைப்பிதழை வழங்கினார். திருமதி ரோஜாபழனியப்பன் ப.எழில்மறவன் ஆகியோர் உடனிருந்தனர்.



■ நீலகிரி மாவட்டம், உதகை ஏ.ஆர் வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆப., அவர்கள் வீர மரணம் அடைந்த காவலர் நினைவு சின்னம் முன்பு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ். நிஷா இ.கா.ப அவர்கள் உட்பட பலர் உள்ளனர் .

## ரஷ்யாவிடம் இருந்து ரூ.10 ஆயிரம் கோடி மதிப்பில் எஸ்400 ஏவுகணை வாங்க இந்தியா பேச்சு

புதுடெல்லி, அக்.24-

ரூ.10 ஆயிரம் கோடியில் எஸ்400 ஏவுகணைகளை வாங்க ரஷ்யாவுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்திய விமானப் படைக்கு ரஷ்யாவிடமிருந்து 5 எஸ்400 வான் தடுப்பு ஏவுகணை தொகுப்பை வாங்க கடந்த 2018ம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, இதுவரை 3 ஏவுகணை தொகுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனிடையே, உக்ரைன் போர் காரணமாக மற்ற 2 ஏவுகணைகளை விநியோகம் செய்வது தாமதமாகி வருகிறது. தரையிலிருந்து வான் இலக்கை



தாக்கும் இந்த ஏவுகணை இந்தியாவில் சுதர்சன சக்ரம் என அழைக்கப்படுகிறது.

இதற்கு நடுவே, கடந்த மே மாதம் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் ஏற்பட்டது. அப்போது பாகிஸ்தானின் வான் வழி தாக்குதலை எஸ்400 வான் தடுப்பு ஏவுகணைகள் வெற்றிகரமாக விண்ணிலேயே தாக்கி அழித்தன. குறிப்பாக பாகிஸ்தானின் 5 முதல் 6 போர் விமானங்கள் மற்றும் ஒரு உளவு விமானத்தை 300 கி.மீ. தொலைவில் வரும் போதே சுட்டு வீழ்த்தியது.

இந்த சூழ்நிலையில் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறும்போது, “இந்தியாவின் வான் தடுப்பு திறனை மேம்படுத்துவதற்காக கூடுதலாக ரூ.10 ஆயிரம் கோடியில் எஸ்400 வான் தடுப்பு ஏவுகணை தொகுப்புகளை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது” என தெரிவித்தன.

ராணுவ தளவாட கொள்முதல் கவுன்சில் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் எஸ்400 ஏவுகணைகளை கூடுதலாக வாங்கும் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்குமாறு விமானப்படை கோரிக்கை வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ரஷ்யாவிடமிருந்து எஸ்500 ஏவுகணை (தரையிலிருந்து வான் இலக்கை தாக்கும்) தொகுப்பு, வானிலிருந்து வான் இலக்கை தாக்கும் ஏவுகணைகளை வாங்குவது குறித்தும் இந்தியா பரிசீலித்து வருகிறது. இதுதவிர, பிரம்மோஸ் சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணை மற்றும் அதன் அடுத்த தலைமுறை வகைகளை மேம்படுத்துவது குறித்தும் இரு நாடுகளும் ஆலோசித்து வருகின்றன.

## உலகின் மாசுபட்ட நகரங்கள்: முதலிடத்தில் டெல்லி

புதுடெல்லி, அக்.24-

உலகின் மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.

சுவிஸ் காற்று தர தொழில்நுட்ப நிறுவனமான ஐகியூஏர்ன் (மினிகிவீகூஷீ) உலக காற்று தர அறிக்கை 2025 தற்போது வெளியாகி உள்ளது. இந்தப் பட்டியலில் நம் நாட்டின் தலைநகரமான டெல்லி முதலிடத்தைப் பிடித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி டெல்லியின் காற்று தரக்குறியீடு (ஏகியூஐ) 350 ஆக உள்ளது.

இதன்மூலம் உலகில் மிகவும் மோசமாக மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் முதலிடத்தை டெல்லி மாநகரம் பிடித்துள்ளது. இந்தியாவில் காற்று மாசுபாடு கடுமையான சுகாதார அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இதனால், இந்தியர்களின் ஆயுள் காலம் 5.2 ஆண்டுகள் குறைகிறது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் இந்தப் பட்டியலில் மும்பை 5வது இடத்தையும், கொல்கத்தா 8வது இடத்தையும் பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தானின் லாகூர் 2வது இடத்தையும், கராச்சி 4வது இடத்தையும் பெற்றுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000